பக்கங்கள்: 05

THEEMPUNAL
தீம்புனல்
மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com தீ : 01 புனல்:51 16.01.2024 செவ்வாய்க்கிழமை வள்ளுவர் ஆண்டு 2054

# இலங்கையில் தரம் குறைந்த காற்று

கொழும்பு, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் காலி ஆகிய பகுதிகளில் வீசும் காற்றின் தர சுட்டெண் குறைவடைந்துள்ளதாக மத்திய பாதுகாப்பு அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் அஜித் வீரசுந்தர தெரிவித்துள்ளார். இதன் விளைவாக சுவாசக் கோளாறுகள் மற்றும் சுவாசம் தொடர்பான மருத்துவ நிலைமைகள் உள்ள நோயாளிகள் இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் வீரசுந்தர குறிப்பிட்டார்.

இலங்கை வழியாக, வங்காள விரிகுடா போன்ற பிற நாடுகளின் வெளிப் பகுதிகளில் இருந்து வரும் காற்றே இதற்கு காரணமாகும். காற்றுடன் வரும் பல வேறு வகையான காற்று மாசுபாடுகளால், இலங்கையின் காற்றின் தரம் குறைந்துள்ளது. இதனால் மக்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம்.

குறிப்பாக இப்பகுதிகளில் ஆஸ்துமா போன்ற நுரையீரல் சம்பந்தமான கோளாறுகள் உள்ளவர்கள் ஏதேனும் ஒரு வகையில் கவனமாக இருக்க வேண்டும்.

குறிப்பாக முகக்கவசங்களை அணிந்தால், உங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கலாம்.

இந்த நிலை படிப்படியாக குறைந்து இன்னும் சில நாட்களில் இயல்பு நிலைக்குத் திரும்பும் என நம்புகிறோம். வளிமண்டலத்தின் நிலையைப் பற்றி எச்சரிக்கையாக இருக்குமாறு நாங்கள் குறிப்பாகக் கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

## கெஹலியவுக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக கொழும்பில் இன்று பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கெஹலியவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வீதி நாடகம், ஆர்ப்பாட்டக் களத்தில் மலர் வளையங்கள், உயிரிழந்த சடலங்களைப் போல உருவங்களை வடிவமைத்து தமது எதிர்ப்புக்களை தெரிவித்தனர்.

இலங்கையில் சுகாதாரத் துறையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு முன்னாள் அமைச்சர் கெஹலியவே பதிலளிக்க வேண்டும், போலி மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு காரணமான முன்னாள் அமைச்சர் கெஹலியவை கைது செய்ய வேண்டும் எனவும் இப்போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இதேவேளை போராட்டக் களத்திற்கு வருகைத் தந்த பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தனவிற்கு போராட்டக்காரர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

கடந்த முதலாம் திகதி முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் வீட்டுக்கு முன்னால் மலர் வளையம் ஒன்று வைக்கப்பட்டமை குறித்து கெஹலியவின் மகள் செய்த முறைப்பாட்டுக்கு அமைய ஒரு சில சிவில் செயற்பாட்டாளர்கள் கறுவாத் தோட்டம் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாகவே கறுவாத் தோட்டம் பொலிஸ் நிலையத்திற்கு இந்த சிவில் செயற்பாட்டாளர்கள் சென்றுள்ளதாகவும் அவர்களிடத்தில் விசாரணை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, குறித்த விடயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பவோ நடவடிக்கை எடுக்கவோ இல்லை என தெரிவித்தும் போராட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

## பட்டிப் பொங்கலை கரிநாளாக அனுஷ்டித்த மக்கள்

மட்டக்களப்பில் கால்நடை பண்ணையாளர்கள் பட்டிப்பொங்கல் தினத்தை கறுப்பு நாளாக அனுஷ்டித்து இன்று (16) மயிலத்தமடு மேய்ச்சல் தரை மீட்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மயிலத்தமடு மாதவனை மேச்சல் தரை பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம் 124 நாட்கள் கடந்துள்ள நிலையில் 124 பொங்கல் பானைகளை கறுப்பு நாடா கட்டி தங்களது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். மாதவனை மயிலத்தமடு பகுதியில் அத்துமீறிய பயிர் செய்கையாளர்களால் இதுவரை 254 கால்நடைகள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போராட்டத்தில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், மட்டக்களப்பிலுள்ள பண்ணையாளர்கள், விவசாய அமைப்பினர், மதத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## விடுதலைப் புலிகள் செயற்பாட்டாளர்களுக்கு பொது மன்னிப்பு

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்காக ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த இரண்டு கைதிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை (ஜனவரி 14) ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாகலிங்கம் மதன்சேகர், செல்வத்துரை கிருபாகரன் ஆகியோருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியுள்ளதாக சண்டே டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

மதன்சேகர், கிருபாகரன் ஆகியோர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (PTA) மற்றும் அவசரகாலச் சட்டங்களின் கீழ் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.


கொழும்பு உயர் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட பின்னர், மார்ச் 29, 2023 அன்று அவசரகால (இதர விதிகள் மற்றும் அதிகாரங்கள்) விதிமுறைகளின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டில் மதன்சேகர் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்களில் கிருபாகரன் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, அவரது தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்திருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டு ஜூலை 20 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றம் கொழும்பு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உறுதி செய்தது.

எவ்வாறாயினும், அரசியலமைப்பின் 34(1) பிரிவின் கீழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் ஜனாதிபதியினால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் பரிந்துரையின் பேரில், இருவரும் நல்ல நடத்தையை வெளிப்படுத்தியதாக சிறைச்சாலைத் திணைக்கள அறிக்கையின் ஆதரவுடன் ஜனாதிபதியின் மன்னிப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# முப்பது வாகனங்களை இறக்குமதி செய்ய விசேட அனுமதி



நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி மூலம் 30 வகையான மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு நான்கு அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக்க விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனங்களின் இறக்குமதியை பாதிக்கும் ஏனைய அனைத்து விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு இந்த வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகம் வழங்குவார் என்றும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

11.01.2024 அன்று வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானி இலக்கம் 2366/19, கல்வி அமைச்சுக்கு இரண்டு பேருந்துகள், சுகாதார அமைச்சுக்கு மூன்று நடமாடும் மகப்பேறு பிரிவு வாகனங்கள் மற்றும் 21 இரட்டை வண்டி வாகனங்கள், தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சுக்கு ஒரு S.U.V வாகனம் ஒன்று ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்திற்கு மூன்று எகானமி கிளாஸ் ராம்ப் கார்கள் இறக்குமதி செய்ய இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

11.12.2023 அன்று துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் சமர்ப்பித்த மகஜர் ஒன்றிற்கு அமைச்சர்கள் சபை வழங்கிய தீர்மானத்தின் பிரகாரம் இந்த விதிமுறைகள் வெளியிடப்படும் என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# “ஸ்டென்ட்” குழாய்கள் தட்டுப்பாடு இருதய நோயாளிகள் பாதிப்பு

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருதய நோயாளர்களுக்கு வழங்கப்படும் ஸ்டென்ட் தட்டுப்பாடு காரணமாக நோயாளர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளார்.

இருதய நோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இதனால், பல நோயாளிகள் காத்திருப்போர் பட்டியலில் காத்திருக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

“ஸ்டென்ட்” குழாய்கள் தட்டுப்பாடு காரணமாக இவற்றை இறக்குமதி செய்வது தொடர்பில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால குறிப்பிட்டுள்ளார்.

# சாதனை படைத்த மாம்பழ சீசன்

இலங்கையில் மாம்பழ அறுவடை இந்த ஆண்டு வரலாறு காணாத அளவில் அதிகரித்துள்ளதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2023ல் நீடித்த வறண்ட வானிலையும் அதைத் தொடர்ந்து பெய்த மழையும் மாம்பழ அறுவடையை அதிகரிக்கச் செய்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, நாடளாவிய ரீதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் மாம்பழங்கள் பயிரிடப்படுவதாகவும், குறிப்பாக ஏற்றுமதிக்காக பயிரிடப்படும் TEJC மாம்பழம், உற்பத்தி குறைவினால் உற்பத்தி தடைப்படலாம் எனவும் அண்மையில் வலியுறுத்தப்பட்டது.

அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பக் கழகத்தின் தரவுகளின்படி, இந்நாட்டில் விளையும் அனைத்து வகையான மாம்பழங்களின் வருடாந்த அறுவடை சுமார் 250 மில்லியன் பழங்கள் ஆகும்.

எவ்வாறாயினும் 2023-4 மாம்பழ பருவம் அந்த அளவைத் தாண்டியுள்ளதாக தற்போதைய தரவு உறுதிப்படுத்தியுள்ளது என்று திணைக்களம் கூறுகிறது.


கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.



அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# மாணவர்களை சலிப்படையச் செய்யும் சம்பவம்

எந்த சக்தியாலும் அழிக்க முடியாத செல்வம் கல்வி. கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. ஒரு மாணவன் கல்வியில் முன்னேறினால் அவனது குடும்பம் உயர்ச்சியடையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. கல்விப் பொதுத்தராதர உயர்தரம் என்பது மாணவனின் கனவை நிஜமாக்கும் காலம். பல்கலைக்கழகம், பட்டம், உத்தியோகம் என்ற தொடர் பயணத்தில் இருக்கும் மாணவர்களின் தலையில் இடியை இறக்கியுள்ளனர் சிலர். பரீட்சை வினாத்தாள் முற்கூட்டியே வெளியிடப்பட்டதால் மாணவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

2023 (2024) ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞானம் ஈ பாக வினாத்தாள் கசிவு சம்பவம் தொடர்பில் மற்றுமோர் சந்தேக நபர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். 38 வயதுடைய சந்தேக நபர் மொரட்டுவ மகா வித்தியாலயத்தில் நிறுவப்பட்டுள்ள உயர்தரப் பரீட்சை நிலையத்தில் உதவியாளராக கடமையாற்றியவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் கடந்த ஞாயிற்றுக் கிழமை அம்பாறையில் உள்ள பிரபல அரச பாடசாலையின் உயர்தர விவசாய விஞ்ஞான ஆசிரியரை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார். 52 வயதுடைய சந்தேகத்திற்குரிய ஆசிரியர் உயர்தர மாணவர்களுக்கான வகுப்புகளையும் நடத்தி வந்தவர் ஆவார்.

2023 உயர் தர பரீட்சையின் விவசாய விஞ்ஞான ஈ மற்றும் ஈஈ வினாத்தாள்களை தனது வீட்டில் வைத்து அவரது சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டுள்ளதாக பொலிஸார் விசாரணைகளில் கண்டுபிடித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆசிரியர் விவசாய விஞ்ஞானம் ஈ வினாத்தாள் கேள்விகளை ஜனவரி 8 ஆம் திகதியும் விவசாய விஞ்ஞானம் ஈஈ வினாத்தாள் கேள்விகளை ஜனவரி 10 ஆம் திகதியும் வெளியிட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

ஆசிரியரை நீதிமன்றில் ஆஜர்படுத்திய பின்னர் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அம்பாறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பரீட்சை வினாத்தாள் வெளியான சம்பவத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற செய்தி வெளியாகி உள்ளது. உண்மையில் இவர்கள் மட்டும் தானா? அல்லது இதன் பின்னால் பெரிய குழு உள்ளதா? என்பதை ஆராய வேண்டும். இந்தச் சம்பவம் இதுதான் முதல் முறையா அல்லது இதற்கு முன்னரும் இப்படியான சம்பவங்கள் நடைபெற்றதா என்பதையும் ஆராய வேண்டும், யாரோ ஒருவரின் கீழ்த்தரமான செயலினால், கஷ்டப்பட்டு படித்த சில மாணவர்கள் மீண்டும் பரீட்சை எழுத வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பரீட்சைத் திணைக்களத்தில் அடிக்கடி வினாத்தாள்கள் இரகசியமாக வெளியேறும் சம்பவங்கள் இப்போது குறைந்திருந்தாலும், அந்த மோசடி தொடர்ந்தும் நடைபெறவில்லை என்று எவராலும் உறுதியாக கூற முடியாத நிலை இருந்து வருகிறது. விவசாய வினாத்தாள் எங்கே? எப்போது? யாரால் வெளியிடப்பட்டது? போன்ற விபரங்கள் விசாரணையில் வெளிவரும்.

இந்தக் குற்றவாளிகளுக்குக் கொடுக்கும் தண்டனை வெளிப்படுத்தப்பட வேண்டும். இனியும் இது போன்ற செயல்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்கு உரிய திணைக்களங்கள் அனைத்தும் இணைந்து செயற்பட வேண்டும்.

## கொலம்பிய மண்சரிவில் 34 பேர் பலி



மேற்கு கொலம்பியாவில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 34 ஆக உயர்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குயிப்டோ மற்றும் மெடலின் நகரங்களை இணைக்கும் மலைப் பகுதியில் வெள்ளிக்கிழமை பரபரப்பான நகராட்சி சாலையில் மண்சரிவு ஏற்பட்டது.

17 உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், மேலும் 17 உடல்களை அடையாளம் காண அதிகாரிகள் முயற்சித்து வருவதாகவும் அரசு வழக்கறிஞர் அலுவலகம் உறுதிப்படுத்தியது.

## தைவானுடனான இராஜதந்திர உறவுகளை துண்டித்த நவ்ரு

தைவானின் ஜனாதிபதித் தேர்தல் முடிந்து 48 மணி நேரத்திற்குள் தைவானில் இருந்து சீனாவிற்கு இராஜதந்திர அங்கீகாரத்தை நவ்ரு மாற்றியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் வடகிழக்கில் உள்ள மைக்ரோனேசியாவில் உள்ள சிறிய தீவு நாட்டின் அரசாங்கம், சீன மக்கள் குடியரசை அங்கீகரிக்க முடிவு செய்துள்ளதாகவும், "குடியரசு மற்றும் மக்களின் நலன்களுக்காக முழு இராஜதந்திர உறவுகளை மீண்டும் தொடங்க முயற்சிப்பதாகவும்" கூறியது.

## மன்னரானார் டென்மார்க் இளவரசர்




டென்மார்க்கின் பட்டத்து இளவரசர் ஃபிரடெரிக்கை, அந்நாட்டுப் பிரதமர் மெட்டே ஃபிரடெரிக்சன் ஞாயிற்றுக்கிழமை முறைப்படி மன்னராக அறிவித்தார்.

ஃபிரடெரிக் ஓ உடன் கிறிஸ்டியன்ஸ்போர்க் அரண்மனையின் பால்கனியில் ஃபிரடெரிக்சன், "பத்தாவது மன்னர் ஃபிரடெரிக் வாழ்க" என்று அறிவித்தார்.

மன்னராக 52 ஆண்டுகளுக்குப் பிறகு அவரது தாயார் ராணி மார்கிரேத் துறந்ததைத் தொடர்ந்து, ஃபிரடெரிக் ஓ டேனிஷ் அரியணையில் ஏறினார்.

## அமெரிக்க சரக்குக் கப்பல் தாக்கியது ஹூவுதி



ஈரான் ஆதரவு பெற்ற ஹூவுதி போராளிக் குழு வணிகக் கப்பல் போக்குவரத்தைத் தொடர்ந்து தாக்கி வருகிறது, யேமன் மீதான அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து தாக்குதல்களின் அலையை மீறி அமெரிக்காவுக்குச் சொந்தமான கொள்கலன் கப்பலை பாலிஸ்டிக் ஏவுகணை மூலம் தாக்கியது.

மார்ஷல் தீவுகள் கொடியிடப்பட்ட ஜிப்ரால்டர் ஈகிள் கொள்கலன் கப்பலுக்கு எதிரான வேலைநிறுத்தம் செங்கடலுக்கு அப்பால் ஏடன் வளைகுடா வரை போர் அரங்கை விரிவுபடுத்துவதைக் குறிக்கிறது.

தாக்குதல் சேதத்தை ஏற்படுத்தவில்லை என்று கருதப்பட்டாலும், யேமனில் உள்ள ஹூவுதி இலக்குகள் மீது அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து தாக்குதல்கள் வணிகக் கப்பல் போக்குவரத்தை அச்சுறுத்தும் போராளிக் குழுவின் திறனைக் குறைக்கவில்லை என்ற அச்சத்தை அதிகரிக்கும்.

## ஈக்வடோரில் 1534 பேர் கைது

"உள்நாட்டு ஆயுத மோதல்" நிலையை ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதி டேனியல் நோபோவா அறிவித்ததில் இருந்து ஈக்வடோர் பாதுகாப்புப் படையினர் 1,534 பேரை கைது செய்துள்ளதாக திங்கட்கிழமை பிரசிடென்சி தெரிவித்துள்ளது.

அந்த மொத்தத்தில், 158 நபர்கள் "பயங்கரவாதம்" என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி தனது சமூக ஊடகக்கணக்கில் வெளியிடப்பட்ட புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது

## கிரிகெட் சின்னத்தை இழந்த இம்ரான்கான்

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தனது பாரம்பரிய தேர்தல் சின்னமான கிரிக்கெட் மட்டையைத் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியை பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கானின் கட்சி, சக்தி வாய்ந்த இராணுவ ஜெனரல்களுடன் முரண்படுகிறது, பெப்ரவரி 8 ஆம் திகதி வாக்கெடுப்புக்கு முன்னதாகவே கூடிய வேகத்தை அதிகரித்த இராணுவ-ஆதரவு அடக்குமுறையுடன் போராடி வருகிறது.

பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் (PTI) கட்சி, இராணுவம் தேர்தல் போட்டியில் இருந்து வெளியேற முயற்சிப்பதாக குற்றம் சாட்டுகிறது, இராணுவம் மறுத்த குற்றச்சாட்டை.

குறைந்த எழுத்தறிவு கொண்ட கிராமப்புறங்களில் பெரும்பான்மையான தொகுதிகள் இருக்கும் நாட்டில் வாக்காளர்கள் அதன் வேட்பாளர்களை அடையாளம் காண வாக்குச் சீட்டுகளில் ஒரு கட்சியின் தேர்தல் சின்னம் முக்கியமானது.

## கிளிநொச்சியில் பொங்கல் விழாவும் புதிர் எடுத்தலும்

வடக்கு மாகாண புதிர் எடுத்தலும் தைப்பொங்கல் விழாவும் இன்று (16) காலை 9.30 மணிக்கு பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பல்லவராயன் கட்டு மாதிரி கிராமத்தில் சிறிநாகபூசனி அம்பாள் ஆலய வளாகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் பற்றி நிரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம்.சார்ள்ஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பாரம்பரிய முறையில் பல்லவராயன் கட்டு சந்தியில் புதிர் எடுக்கப்பட்டு விழா மண்டபம் வரை எடுத்து வரப்பட்டு பாரம்பரிய முறைப்படி அரிசியாக்கப்பட்டு பொங்கலிடப்பட்டது.

# கடல் அலையில் சிக்கிய நால்வர் காப்பாற்றப்பட்டனர்

பாணந்துறை கடற்கரையில் நீராடச் சென்ற நால்வர் கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் பாணந்துறை பொலிஸ் உயிர்பாதுகாப்பு பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

கோணபால, கலவானையைச் சேர்ந்த இளைஞர்களும் யுவதிகளும் பொலிஸாரால் காப்பாற்றப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.


பாணந்துறை கடற்கரையில் கடமையில் இருந்த உப பொலிஸ் பரிசோதகர் நிமல்சிறி, பொலிஸ் கான்ஸ்டபிள் புஷ்பகுமார மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் தேஷான் ஆகியோரினால் இவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

## வினாத்தாள் வெளியான சம்பவம் மற்றுமொருவர் கைது

க.பொ.த உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞான வினாத்தாளில் சில வினாக்கள் சமூக வலைத்தளங்களில் பரவியமை தொடர்பில் அலுவலக உதவியாளர் ஒருவர் செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்தார்.

சந்தேக நபர் மொரட்டுவ பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி ஒருவரின் அலுவலக உதவியாளராக கடமையாற்றியவர் என தெரிய வந்துள்ளது.

## 24 ஆம் திகதி பாராளுமன்ற கூட்டத் தொடர் முடிவடைகிறது?



ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது அமர்வு எதிர்வரும் 24ஆம் திகதி நிறைவடையவுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றம் திறந்து வைக்கப்படவுள்ளது. பாராளுமன்றம் இம்மாதம் 23, 24ஆம் திகதிகளில் கடைசியாக கூடவுள்ளது. இம்மாதம் 25 ஆம் திகதி வியாழன் போயா விடுமுறை என்பதால் அந்த வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே பாராளுமன்றம் கூடும்.

எதிர்வரும் 24 ஆம் திகதி நள்ளிரவில் பாராளுமன்ற அமர்வு முடிவடைவதற்கான வர்த்தமானியை ஜனாதிபதி வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடைந்த நிலையில், கோப், கோபா உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட குழுக்கள் இரத்து செய்யப்பட்டு, அதன்படி அந்தக் குழுக்கள் அனைத்தும் மீண்டும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பதவிக்காலம் முடிவடைவதால் உயர் அதிகாரிகள் குழு, துறைசார் மேற்பார்வைக் குழு மற்றும் சிறப்புக் குழுக்கள் மட்டுமே ஒழிக்கப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டு 9 ஆவது பாராளுமன்றத்தின் மூன்றாவது அமர்வு நிறைவடைந்தது.

## வைத்தியசாலைகளில் முப்படையினர்



வைத்தியசாலை பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நோயாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்ப்பதற்காக சுகாதார அமைச்சின் கோரிக்கைக்கு அமைய முப்படையினர் வைத்தியசாலைகளுக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். இன்று காலை 06.30 மணி முதல் சுகாதார சேவையில் உள்ள வைத்தியர்கள் தவிர்ந்த 72 தொழிற்சங்கங்கள் 24 மணிநேர அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

வைத்தியர்களுக்கு வழங்கப்படும் 35,000 ரூபா கொடுப்பனவை தங்களுக்கும் வழங்குமாறுகோரி தொழிற்சங்கங்கள் இந்த நடவடிக்கையை முன்னெடுத்து வருவதுடன், அத்தியாவசிய நடவடிக்கைகளை மாத்திரம் முன்னெடுக்க சுகாதார சங்கங்களும் தீர்மானித்துள்ளன.

எனினும் இன்று காலை சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்கங்களை கலந்துரையாடலுக்கு அழைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கொழும்பு துறைமுகத்தில் ரிவேரா சொகுசுக் கப்பல்

மாலைதீவில் இருந்து ரிவேரா சொகுசு பயணிகள் கப்பல் ஒன்று (15) அதிகாலை 1,090 பயணிகள் மற்றும் 790 பணியாளர்களுடன் இலங்கையை வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க, கனேடிய, இந்திய சுற்றுலாப் பயணிகளுடன் மர்ஷல் தீவுகளின் கொடியுடன் வருகை தந்த ரிவேரா என்ற சொகுசுக் கப்பலில் வந்த சுற்றுலாப் பயணிகள் கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளதாக கூறப்படுகின்றது.

மேலும் ரிவேரா சொகுசு பயணிகள் கப்பல் இன்று ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கும் அதன்பின்னர் தாய்லாந்தின் புக்கெட் துறைமுகத்துக்கும் பயணிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறைச்சாலைகளில் இடப்பற்றாக்குறை

சிறைச்சாலைகளின் நிர்வாகம் குறித்த செயல்திறன் தணிக்கை அறிக்கை, சிறை அறைகளின் வார்டு கொள்ளளவை மீறுவதாகக் காட்டுகிறது.

அறிக்கையின்படி, கைதிகளின் சதவீதம் 232 சதவீதமாக அதிகரித்துள்ளது.

சிறைக்கைதிகளை பராமரிக்க ஆண்டுதோறும் 800 கோடி ரூபாய்க்கு மேல் அரசு செலவழிப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

27 சிறைச்சாலைகளில் 187 கழிவறைகள் பற்றாக்குறையாக உள்ளதாகவும், தற்போதுள்ள 287 கழிவறைகள் பழுதடைந்த நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதிகளுக்கு பிணை வழங்கப்பட்டுள்ள போதிலும் பிணை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் பெரும் எண்ணிக்கையிலான கைதிகள் சிறையில் உள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறையிலுள்ள கைதிகளின் எண்ணிக்கை 1,795 என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை இரண்டு சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளால் பல கட்டடங்கள் இடிந்துள்ளதாக சிறைச்சாலைகளில் உள்ள கூட்ட நெரிசலை நிர்வகிப்பது தொடர்பான செயல்திறன் தணிக்கை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# பீபா விருதுகள் 2023



உதைபந்தாட்டத்தில் சிறப்பாகச் செயற்பட்டவர்களுக்கு லண்டனில் பீபா விருது வழங்கி கௌரவித்தது. தேசிய அணிகளின் பயிற்சியாளர்கள், கப்டன்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள், ஆன்லைனில் ரசிகர்களின் வாக்களித்து வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

**சிறந்த பீபா ஆண்கள் வீரர்**

வெற்றியாளர்: லியோனல் மெஸ்ஸி (48 புள்ளிகள்)

இரண்டாவது: எர்லிங் ஹாலண்ட் (48 புள்ளிகள்)

மூன்றாவது: கைலியன் எம்பாப்பே (35 புள்ளிகள்)

**சிறந்த பீபா மகளிர் வீராங்கனை**

வெற்றியாளர்: ஐதானா பொன்மதி (52 புள்ளிகள்)

இரண்டாவது:லிண்டா கைசெடோ (40 புள்ளிகள்)

மூன்றாவது: ஜென்னி ஹெர்மோசோ (36 புள்ளிகள்)

**சிறந்த பீபா ஆண்கள் கோல்கீப்பர்**

வெற்றியாளர்: எடர்சன் (23 புள்ளிகள்)

இரண்டாவது: திபாட் கோர்டோயிஸ் (20 புள்ளிகள்)

மூன்றாவது: யாசின் பவுனோ (16 புள்ளிகள்)ஷ

**சிறந்த பீபா மகளிர் கோல்கீப்பர்**

வெற்றியாளர்:மேரி ஏர்ப்ஸ் (28 புள்ளிகள்)

இரண்டாவது: கேடலினா கோல் (14 புள்ளிகள்)

மூன்றாவது: மெக்கன்சி அர்னால்ட் (12 புள்ளிகள்)

**சிறந்த பீபா ஆண்கள் பயிற்சியாளர்**

வெற்றியாளர்: பெப் கார்டியோலா (28 புள்ளிகள்)

இரண்டாவது: லூசியானோ ஸ்பாலெட்டி (18 புள்ளிகள்)

மூன்றாவது: சிமோன் இன்சாகி (11 புள்ளிகள்)

**சிறந்த பீபா பெண்கள் பயிற்சியாளர்**

வெற்றியாளர்: சரினா வீக்மேன் (28 புள்ளிகள்)

இரண்டாவது: எம்மா ஹேய்ஸ் (18 புள்ளிகள்)

மூன்றாவது: ஜொனாடன் ஜிரால்டெஸ் (14 புள்ளிகள்)

**பீபா புஸ்காஸ் விருது:** கில்ஹெர்ம் மத் ருகா

பீபா ஃபேர் பிளே விருது: பிறேஸில் தேசிய அணி.

**பீபா ரசிகர் விருது:** Hugo Daniel “Toto” Iniguez


**பீபா சிறப்பு விருது:** மார்டா

ஆண்கள் உலக 11: திபாட் கோர்டோயிஸ், கைல் வாக்கர், ரூபன் டயஸ், ஜான் ஸ்டோன்ஸ், ஜூட் பெல்லிங்ஹாம், கெவின் டி ப்ருய்ன், பெர்னார்டோ சில்வா, வினிசியஸ் ஜூனியர், லியோனல் மெஸ்ஸி, கைலியன் எம்பாப்பே மற்றும் எர்லிங் ஹாலண்ட்

மகளிர் உலக 11: மேரி ஏர்ப்ஸ், லூசி வெண்கலம், ஓல்கா கார்மோனா, அலெக்ஸ் கிரீன்வுட், ஐடானா பொன்மதி, எல்லா டூன், கெய்ரா வால்ஷ், லாரன் ஜேம்ஸ், சாம் கெர், அலெக்ஸ் மோர்கன் ரூ அலெஸ்சியா ரூசோ









இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 16.01.2024 அன்று வெளியிடப்பட்டது.